வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com மலர் : 08 30.03.2026 திங்கட்கிழமை இதழ் : 83 பக்கங்கள் : 08

# ஐந்து ஆண்டு கால எரிபொருள் ஒப்பந்தத்துக்கு ரஷ்யா அழைப்பு

## அணுமின் நிலைய திட்டத்தை நிராகரித்தது இலங்கை அரசு

கொழும்பு, மார்ச் 30

**இலங்கையின் தற்போதைய எரிபொருள் மற்றும் மின்சார நெருக்கடியைத் தீர்ப்பதற்காக ரஷ்யாவிடம் இருந்து எண்ணெய் கொள்வனவு செய்வது தொடர்பான பேச்சுவார்த்தைகளில் புதிய திருப்பங்கள் ஏற்பட்டுள்ளன.**

இலங்கைக்கு அணுமின் நிலையத் திட்டத்தை வழங்க ரஷ்யா முன்வைத்த கோரிக்கையை அரசாங்கம் நிராகரித்துள்ள நிலையில், நீண்ட கால எண்ணெய் ஒப்பந்தம் தொடர்பாக ரஷ்யா நிபந்தனைகளை விதித்துள்ளது.

ரஷ்ய வலுசக்தி பிரதி அமைச்சர் றோமன் மார்ஷவின் இலங்கை விஜயத்தின்போது மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்களில் அணுமின் நிலையம் குறித்து பேசப்பட்டதா என அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ விடம் வினாவிய போது, இது தொடர்பான விவரங்களை ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிடும் எனத் தெரிவித்தார்.

எனினும், வெளிவிவகார அமைச்சு இதனை உறுதிப்படுத்தியுள்ளதுடன், ரஷ்யாவின் அணுமின் நிலையத் திட்டக் கோரிக்கையை இலங்கை நிராகரித்துள்ள அதே வேளை, எண்ணெய் கொள்வனவுக்கான ஒப்பந்தம் குறித்து ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் 07

## இந்திய வரி முறையை பின்பற்றுக! அரசாங்கத்திடம் நாமல் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 30

உலக சந்தையில் எரிபொருள் விலை அதிரடியாக உயரும் போது, உள்நாட்டில் விலையை ஸ்திரப்படுத்த இந்தியா பின்பற்றும் வரி திருத்த முறையை இலங்கையும் கருத்திற் கொள்ள வேண்டும் என பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் தனது உத்தியோகபூர்வ "எக்ஸ்" பக்கத்தில் பதிவிட்டுள்ளதாவது,

இந்தியா தனது எரிபொருள் வரியைக் குறைத்தது உடனடி விலைக்குறைப்பிற்காக மட்டுமல்ல, 07

## உள்ளூர் உற்பத்திகளை பாதுகாக்க புதிய சட்டம்

கொழும்பு, மார்ச் 30

உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் விலைகளை விடக் குறைவான விலையில் விற்பனை செய்யப்படும் இறக்குமதிப் பொருட்களுக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கைகளை எடுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது என்று தொழில் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி தெரிவித்தார். 07

## 200 இற்கும் மேற்பட்ட முன்மொழிவுகளை ஆராய்கிறது பெற்றோலிய கூட்டுத்தாபனம்!

கொழும்பு, மார்ச் 30

இலங்கைக்குத் தேவையான மசகு எண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட எரிபொருள்களைப் பெற்றுக்கொள்வதற்காக விடுக்கப்பட்ட திறந்த கோரிக்கைக்கு, சர்வதேச அளவில் 200 இற்கும் மேற்பட்ட நிறுவனங்கள் முன்மொழிவுகளை வழங்கியுள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

கிடைக்கப்பெற்றுள்ள நூற்றுக்கணக்கான விண்ணப்பங்களை மதிப்பீடு செய்வதற்காக இரண்டு விசேட குழுக்கள் நியமிக்கப்பட்டு, அவை "24/7" அடிப்படையில் (நேரம் பாராது) இயங்கி வருவதாகக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் மயூர நெத்திகுமாரகே தெரிவித்தார்.

உலக சந்தையில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக, 07

## மத்திய கிழக்கு யுத்தம் காரணமாக இலங்கைக்கு பல்வேறு தாக்கங்கள்!

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 30

மத்திய கிழக்கு யுத்தம் தீவிரமடைந்து, யேமனின் வடமேற்கு பகுதியையும் சனா நகரையும் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஹவுதி அமைப்பினர் மத்திய கிழக்கு போரில் புதிதாக நேரடியாக தாக்குதல்களை தொடுக்க ஆரம்பித்துள்ள நிலையில் இவை இலங்கைக்கு பல்வேறு கோணங்களில் கடுமையான தாக்கங்களை ஏற்படுத்தும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். 07

## சிறுவனை காணவில்லை

வவுனியா, மார்ச் 30

வவுனியாவில் சிறுவனை காணவில்லை என நெளுக்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வவுனியா, கணேசபுரம் 7ஆம் ஒழுங்கையை சேர்ந்தவரும், நெளுக்குளம் கலைமகள் வித்தியாலய மாணவனுமான தி. லதுர்சன் (வயது-14) என்பவரே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

நேற்று முன் தினம் மதியம் 2.30 மணியளவில் தாயிடம் இருந்து சிகையலங்கார நிலையத்திற்கு செல்வதற்காக பணம் பெற்றுச் சென்ற சிறுவன் மாலை ஆகியும் வீடு வந்து சேரவில்லை.

இதன் காரணமாக உறவினர்கள், அயலவர்கள், நண்பர்களின் உதவியுடன் அப் பகுதி முழுவதும் 07

## நாவற்குழி விகாரையின் இளநிலை பிக்கு கைது!

### சிறுமி துஷ்பிரயோக குற்றச்சாட்டில்

யாழ்ப்பாணம், மார்ச் 30

நாவற்குழி விகாரையின் இளநிலை பிக்கு ஒருவர் சிறுமியை துஸ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

நாவற்குழி விகாரைக்கு அருகில் வசிக்கும் சிறுமி விகாரை வளாகத்தில் வடிகட்டிய நீரினை பெறுவதற்காக நேற்று முன்தினம் சென்றவேளை 07

## இறக்குமதி செய்யப்படும் மலிவு விலை பொருள்களுக்கு எதிராகப் புதிய சட்டம்!

கொழும்பு, மார்ச் 30

உள்நாட்டு உற்பத்திகளைப் பாதுகாக்கும் நோக்கில், குறைந்த விலையில் இறக்குமதி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படும் பொருட்களுக்கு எதிராகக் கடுமையான சட்டங்களை உருவாக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

தொழில் மற்றும் தொழில்முனைவோர் அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி இதனைத் தெரிவித்துள்ளார்.

மாத்தளை மாவட்டத்திலுள்ள நாலந்தா மற்றும் களுதேவல தொழிற்பேட்டைகளுக்கு மேற்கொண்ட விசேட கள விஜயத்தின் போதே அமைச்சர் இந்த அதிரடி அறிவிப்பை வெளியிட்டார்.

உள்நாட்டு உற்பத்திப் பொருட்களின் விலையை விட, இறக்குமதி செய்யப்படும் அதே பொருட்களின் 07

## சீன ஆய்வுக் கப்பலில் உள்ள ஊழியருக்கு மருத்துவ உதவி

### கப்பலுக்கு அனுமதி மறுப்பு

கொழும்பு, மார்ச் 30

இலங்கையின் பிரத்தியேக பொருளாதார வலயத்திற்குள் நங்கூரமிட்டிருந்த சீன ஆய்வுக்கப்பலான "ஷி யான் 6" இல் பணியாற்றும் ஊழியர் ஒருவருக்கு அவசர மருத்துவ உதவிகளை வழங்க இலங்கை கடற்படை முன்வந்துள்ளது.

இருப்பினும், குறித்த கப்பல் இலங்கையின் கடல் எல்லைக்குள் நுழைய அனுமதி வழங்கப்படவில்லை என அரசாங்கத்தின் சிரேஷ்ட அதிகாரி 07

## அவசரகால நிலை ஒரு மாதம் நீடிப்பு

கொழும்பு, மார்ச் 30

இலங்கையில் நடைமுறையிலுள்ள அவசரகால நிலையை மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடித்து ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவினால் விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவின் கையொப்பத்துடன் வெளியாகியுள்ள இந்த அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின்படி, பொது பாதுகாப்பு கட்டளைச் 03

## அனைத்து பிள்ளைகளுக்கும் புதிய தொழில்நுட்ப வாய்ப்பு

### பிரதமர் ஹரிணி அமரசூரிய



கொழும்பு, மார்ச் 30

நாட்டின் அனைத்துப் பகுதிகளையும் சேர்ந்த சகல பிள்ளைகளுக்கும் புதிய தொழில்நுட்ப வாய்ப்புகள் கிடைக்கக்கூடிய வகையிலான கல்வி முறைமையொன்றை உருவாக்குவதே அரசாங்கத்தின் நோக்கமாகும் எனப் பிரதமர் கலாநிதி ஹரிணி 07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின் கட்டண அதிகரிப்பு இறுதித் தீர்மானம் இன்று!

## 13.56 வீத சீரான கட்டண உயர்வை நடைமுறைப்படுத்துமாறு யோசனை

கொழும்பு, மார்ச் 30

மின்சாரக் கட்டண அதிகரிப்பு தொடர்பான இறுதித் தீர்மானத்தை இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு இன்று அறிவிக்கவுள்ளது.

ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான காலப்பகுதிக்காக, அனைத்துப் பிரிவினருக்கும் 13.56 வீத சீரான கட்டண உயர்வை நடைமுறைப்படுத்து மாறு இலங்கை மின்சார சபை முன்வைத்துள்ள யோசனை குறித்து ஆணைக்குழு தற்போது விரிவாக ஆராய்ந்து வருகின்றது.

நடைமுறையிலுள்ள கட்டணங்கள் மூலம் எதிர்பார்க்கப்படும் வருமானத்தை விட 15.8 பில்லியன் ரூபாய் பற்றாக்குறை நிலவுவதைச் சுட்டிக்காட்டி மின்சார சபை இந்த அதிக ரிப்பைக் கோரியுள்ளது.

எவ்வாறாயினும், மின்சார சபையின் கடந்தகாலக் கடன்கள் அல்லது நட்டங்கள் எவையும் நுகர்வோர் மீது சுமத்தப் படமாட்டாது என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் லலித் சந்திரலால் உறுதியளித்துள்ளார்.

உலகளாவிய எரிபொருள் மற்றும் நிலக்கரி விநியோகத் தில் நிலவும் நிச்சயமற்ற தன்மைகளுக்கு மத்தியிலும், தற்போதைய சூழலில் மின்வெட்டு ஏற் படுவதற்கான வாய்ப்புகள் இல்லையெனவும் அவர் குறிப்பிட்டார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கைக்கு அமைய, ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை மேற்கொள்ளப்படும் வழமையான கட்டண மீளாய்வின் ஒரு பகுதியாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கட்டணங்கள் அதிகரிக்கப்படுமா அல்லது குறைக்கப்படுமா என்பது குறித்த உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியாகவுள்ளது.

(அ)

# சிறுபோகச் செய்கைக்கு உரம் கிடைப்பதில் சிக்கல்

கொழும்பு, மார்ச் 30

சிறுபோக பயிர் செய்கைக்கான உரம் கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதால், நாட்டின் விவசாயத்துறை மீண்டும் ஒரு நிச்சயமற்ற நிலையை எதிர்நோக்கியுள்ளது.

ஓமானிலிருந்து இந்தியா ஊடாக ஏப்ரல் மாதம் தொடக்கத்தில் இலங்கைக்கு வரவேண்டிய சுமார் 25 ஆயிரம் மெற்றிக் தொன் யூரியா உரக் கப்பல், மத்திய கிழக்கில் நிலவும் போர் பதற்றம் காரணமாகத் தாமதமாகக் கூடும் என விவசாய மற்றும் கால்நடை அமைச்சின் பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன எச்சரிக்கை விடுத்துள் ளார்.

உலகளாவிய கப்பல் போக்குவரத்துப் பாதைகளில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் காரணமாக இக்கப்பல் வருகை குறித்து உறுதிப்படுத்த முடியாத சூழல் நிலவினாலும், 90 வீத சாத்தியக்கூறுகளுடன் இது உரிய நேரத்தில் வரும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

தற்போது கையிருப்பில் உள்ள உரம் சிறுபோக பயிர்ச் செய்கை பருவத்தின் ஆரம்ப கட்டத்திற்குப் போதுமானது என அரசாங்கம் கூறினாலும், விவசாய அமைப்புகள் அதனை மறுத்துள்ளன.

சுமார் 4 இலட்சத்து 50 ஆயிரம் ஹெக்ரேயர் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்படும் பயிர்ச் செய்கைக்கு 1 இலட்சத்து 20 ஆயிரம் மெற்றிக் தொன் யூரியா தேவைப்படும் நிலையில்,

வெறும் 25 ஆயிரம் மெற்றிக் தொன் எவ்வாறு போதுமானதாக இருக்கும் என விவசாய சங்கங்கள் கேள்வி எழுப்பியுள்ளன.

(அ)

# டிஜிற்றல் அடையாள அட்டை கட்டம் கட்டமாக அமுலாகும்

கொழும்பு, மார்ச் 30

நாட்டில் தேசிய டிஜிற்றல் அடையாள அட்டை திட்டத்தை கட்டம் கட்டமாக அமுல்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

முதற்கட்டமாக அடிப்படை உள்கட்டமைப்புகளை உருவாக்குதல் மற்றும் பாதுகாப்பான அடையாளச் சான்றுகளை வழங்குதல் போன்ற பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக டிஜிற்றல் பொருளாதாரம் தொடர்பான பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன இதனை தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டின் மூன்றாவது அல்லது நான்காவது காலாண்டுக்குள் முதலாவது டிஜிற்றல் அடையாள அட்டைகளை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள் நாடு தழுவிய ரீதியில் தேசிய அடையாள அட்டைகளை வைத்திருக்கும் அனைவ ரையும் மீளப் பதிவு செய்து, நவீன அடையாள அட்டை கட் டமைப்பை உருவாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

புதிய டிஜிற்றல் அடையாள அட்டையானது நவீன பாதுகாப்பு அம்சங்களைக் கொண்டிருக்கும்.

விரல் அடையாளங்கள் போன்ற பயோமெற்றிக் தரவு கள் என்க்ரிப்ஷன் முறையில் பாதுகாக்கப்படும்

இதன் மூலம் வங்கிச் சேவைகள், நலன்புரித் திட்டங்கள் மற்றும் உத்தியோகபூர்வ ஆவணங்களுக்காக அரசாங்க அலுவலகங்களுக்கு நேரில் செல்லவேண்டிய அவசியம் குறையும்.

தொலைவிலிருந்தே அடையாளத்தை உறுதிப்படுத்த முடியும் என பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன தெரிவித்துள்ளார்.

# சட்டவிரோத மணல் ஏற்றிய வாகனத்தை அதிரடிப்படையினர் துரத்திப் பிடித்தனர்!

யாழ்ப்பாணம், மார்ச் 30

கற்கோவளம் பகுதியில் சட்டவிரோத மணல் ஏற்றிய வாகனத்தை விசேட அதிரடிப் படையினர் துரத்தி பிடித்துள்ளனர்.

கற்கோவளம் பகுதியை சேர்ந்த நபர் ஒருவர் தொடர்சியாக சட்ட விரோத மணல் மண் அகழ்ந்து விற்பனை செய்து வருவதாக பருத்தித்துறை விசேட அதிரடிப் படையினருக்கு மக்கள் முறைப்பாடு வழங்கினர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் சட்டவிரோத மணல் அகழ்ந்து கொண்டிருந்தபோது சிறப்பு அதிரடிப் படையினர் சுற்றிவளைத்தனர்.

வாகனத்தை கைப்பற்ற முற்பட்டபோது குறித்த வாகனம் மிக வேகமாக தப்பிச் சென்றுள்ளது.

இந்நிலையில் இரவு 11:00 மணியிலிருந்து வாகனத்தைத் துரத்தி சென்ற விசேட அதிரடிப் படையினர் நேற்று அதிகாலை 4 மணியளவில் வாகனத்தைக் கைப்பற்றினர்.

எனினும் சாரதி தப்பிச் சென்றுள்ளார்.

கைப்பற்றபட்ட வாகனம் பருத்தித்துறை பொலிஸாரிடம் நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக விசேட அதிரடிப் படையினாரால் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(அ)

# ஏப்ரல் முதல் சுழற்சி முறை மின் தடை ஏற்பட வாய்ப்பு!

கொழும்பு, மார்ச் 30

இலங்கையின் மின் உற்பத்தி கட்டமைப்பானது கடும் அழுத்தத்திற்கு உள்ளாகியுள்ள நிலையில், எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல் இரவு நேரங்களில் திட்டமிடப்பட்ட மின் தடைகளை அமுல்படுத்த வேண்டிய சூழல் ஏற்படலாம் என மின்சார சபை பொறியியலாளர்கள் எச்சரித்துள்ளனர்.

மின்சார விநியோகத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு பல காரணிகள் ஒன்றாக அமைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரதான நீர்மின் தேக்கங்களில் நீர் மட்டம் வேகமாக வீழ்ச்சியடைந்து வருகின்றது. மார்ச் 24 ஆம் திகதி நிலவரப் படி, காசல்ரீ (30 வீதம்), கொத்மலை (28 வீதம்) மற்றும் விக்டோரியா (66 வீதம்) என்ற அளவிலேயே நீர் இருப்பு உள்ளது.

ஒரு அலகு டீசல் மின்சாரத்தை உற்பத்தி செய்ய அரசாங்கத்திற்கு சுமார் 90 ரூபா செலவாகிறது. மாலை நேர உச்ச பயன்பாட்டு நேரத்தில் நிலவும் 150 மெகாவாட் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய தினசரி 36 மில்லியன் ரூபா செலவிடப் படுகிறது.

மத்திய கிழக்கில் நிலவும் போர் பதற்றங்களால் எரிபொருள் மற்றும் நிலக்கரி இறக்குமதியில் தடைகள் ஏற்பட்டுள்ளதோடு, அவற்றின் விலைகளும் உயர்ந்துள்ளன.

நுரைச்சோலை மின்நிலையத்தில் நிலக்கரியின் தரம் தொடர்பான சிக்கல்கள் இன்னும் நீடிக்கின்றன.

நாடு தழுவிய ரீதியில் பாரிய மின் முறிவுகள் ஏற்படுவதைத் தவிர்க்க, குறுகிய கால சுழற்சி முறையிலான மின்வெட்டுக்களே ஒரே தீர்வு என மூத்த பொறியியலாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

மின் நுகர்வு உச்சத்தில் இருக்கும் இரவு 6 மணி முதல் 10 மணி வரை இந்த மின்தடை கள் ஏற்பட வாய்ப்புள்ளது. மின் கட்டமைப்பின் ஸ்திரத் தன்மையைப் பேணவும், பரா மரிப்புப் பணிகளை முன்னெடுக் கவும் இது அவசியமாகிறது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# வீதி விபத்துக்களின் எண்ணிக்கை உயர்வு

கொழும்பு, மார்ச் 30

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், இந்த ஆண்டின் இதுவரையிலான காலப்பகுதியில் வீதி விபத்துக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

போக்குவரத்துக் கட்டுப்பாடு மற்றும் வீதிப் பாதுகாப்புப் பிரிவின் பிரதி பொலிஸ்மா அதிபர் டபிள்யூ.பி.ஜே. சேனாதீர இது குறித்துத் தெரிவிக்கையில்-

இந்த விபத்துக்களில் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்களும், அவர்களுக்கு பின்னால் அமர்ந்து பயணிப்பவர்களுமே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

# 453 மருத்துவ பட்டதாரிகளுக்கு நியமனம்: விண்ணப்பம் கோரல்

கொழும்பு, மார்ச் 30

தமது உள்ளகப் பயிற்சியை வெற்றிகரமாக நிறைவு செய்த 453 மருத்துவ பட்டதாரிகளுக்கு, ஆரம்பநிலை மருத்துவ அதிகாரிகளாக நியமனம் வழங்குவதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

2025. 07.04 ஆம் திகதியுடன் பயிற்சியை முடித்த 453 மருத்துவ பட்டதாரிகள் இந்த ஆரம்பநிலை மருத்துவ அதிகாரிகளாக நியமனம் வழங்குவதற்கு தகுதியுடையவர்களாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

2026. 04. 04 நண்பகல் 12. 00 மணி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியாகும். குறித்த காலப்பகுதிக்குள் விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பது கட்டாயமாகும்.

குறித்த திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்காத விண்ணப்பதாரிகள் தொடர்பில் சுகாதார மற்றும் ஊடக அமைச்சு எந்தவித பொறுப்பையும் ஏற்காது என அந்த அமைச்சின் ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
30.03.2026 திங்கட்கிழமை
விசுவாவசு வருடம், பங்குனி 16

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## தமிழ்க் கட்சிகளின் ஒன்றிணைந்த செயல்பாடுகளுக்கான வாய்ப்புக்கள்?

மீண்டும் ஒன்றிணைந்து செயல்படத் தொடங்கியிருக்கும் இலங்கை தமிழரசு கட்சியும் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியும் தமிழ் மக்களின் அரசியல் மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகள் தொடர்பில் பொதுவான தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் கொள்கைகளை வகுப்பதற்கும் ஒன்பது பேரைக் கொண்ட ஒரு இணைக்குழுவை நேற்று முன்தினம் சனிக்கிழமை நியமித்திருக்கின்றன.

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர். எல்.எவ்.), தமிழீழ மக்கள் விடுதலை கழகம் (புளொட்) மற்றும் தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) ஆகிய கட்சிகள் தமிழரசு கட்சியுடன் இணைந்து செயற்படுவது ஒன்றும் இதுதான் முதற்தடவை அல்ல. அவை ஏற்கெனவே இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்து இரு தசாப்தங்களுக்கும் அதிகமான காலமாக தமிழ்த் தேசியக் கூடமைப்பில் இணைந்து செயற்பட்ட கட்சிகளே.

ஒரு கட்டம் வரை கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸும் கூட கூட்டமைப்பில் அங்கம் வகித்தது.

துரதிர்ஷ்டவசமான அரசியல் நிகழ்வுப் போக்குகளின் விளைவாக இந்த கட்சிகள் வெவ்வேறு காலப்பகுதிகளில் கூட்டமைப்பில் இருந்து வெளியேறின.

உள்நாட்டுப் போரின் முடிவுக்கு பின்னரான காலப்பகுதியில் தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் போராட்டத்தை புதிய நிலைவரங்களுக்கு பொருத்தமான முறையில் ஜனநாயக ரீதியில் முன்னெடுப்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பலம்பொருந்திய அரசியல் இயக்கமாக கட்டியெழுப்புவதற்கு தமிழ் அரசியல் தலைவர்கள் தவறியது குறித்து தமிழ் மக்கள் மத்தியில் இன்றும் கூட கடுமையான கவலை இருக்கிறது.

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி கடந்த வருடம் உள்ளூராட்சி தேர்தல்களின் பின்னர் சில மாதங்கள் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடனும் இணைந்து செயற்பட்டது. ஆனால், தற்போது மீண்டும் அந்த கூட்டணி தமிழரசு கட்சியுடன் இணைந்து செயல்பட முன்வந்திருக்கிறது.

ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சிதைந்து போவதற்கு வழிவகுத்த காரணிகளை மனதிற் கொண்டு தமிழ் மக்களின் எதிர்கால நலன்களை முன்னிறுத்தி புதிய அணிசேருகை வலுப்பெற வேண்டும் என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாக இருக்கிறது.

தமிழ்க் கட்சிகள் பிரிந்து நின்று செயற்பட்டதனால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட வெறுப்பை பாராளுமன்ற தேர்தலில் வடக்கு, கிழக்கு முடிவுகள் தெளிவாக வெளிக்காட்டியிருந்ததை தமிழ் அரசியல்வாதிகள் மறந்திருக்கமாட்டார்கள்.

தமிழரசு கட்சியும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியும் ஒன்றிணைந்து தற்போது முன்னெடுக்கும் செயன்முறைகளில் இணைவதற்கு தமிழ் தேசிய மக்கள் முன்னணி முன்வரக்கூடிய சாத்தியங்களை எதிர்பார்ப்பது கஷ்டம்.

ஆனால், புதிய அரசியலமைப்பை வரைவதற்கான செயற்பாடுகளை அரசாங்கம் முன்னெடுக்கும் பட்சத்தில் அதில் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுக்காக ஒன்றிணைந்து யோசனைகளை முன்வைப்பதற்காக தமிழ்க்கட்சிகளை ஒரு மேசைக்கு கொண்டு வரும் தமிழ் சட்டத்தரணிகள் பேரவையின் முயற்சிகளுக்கு முழுமையாக ஒத்துழைப்பதற்கு கஜேந்திரக்குமார் இணங்கியிருக்கிறார் என்பது மகிழ்ச்சிக்குரியது.

இவ்வாறாக, தமிழ்க் கட்சிகளை ஒன்றிணைந்து செயற்பட வைப்பதற்காக வெவ்வேறு தளங்களில் என்றாலும் முன்னெடுக்கப்படுகின்ற முயற்சிகள் இடையூறின்றித் தொடரவேண்டும் என்பதே ஈழநாட்டின் எதிர்பார்ப்பாகும்.

## ட்ரம்ப் நிர்வாகத்துக்கு எதிராக அமெரிக்காவில் போராட்டம்

*வாஷிங்டன், மார்ச் 30*

அமெரிக்காவின் முக்கிய நகரங்கள் முழுவதும் ட்ரம்ப் நிர்வாகத்துக்கு எதிராக பாரிய எதிர்ப்பு போராட்டங்கள் ஆரம்பமாகியுள்ளன.

இது முன்னதாக மில்லியன் கணக்கான மக்கள் பங்கேற்ற “மன்னர்கள் வேண்டாம்” போராட்டத்தின் மூன்றாம் கட்டத்தை குறிக்கும் வகையில் அமைந்துள்ளது.

ஈரானுடனான போர், கூட்டாட்சி குடியேற்ற சட்டங்களை அமுல்படுத்துதல் மற்றும் அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவு உள்ளிட்ட ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கொண்டு வந்த கொள்கைகளுக்கு எதிராகவே இந்தப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுவதாக போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.




நியூயோர்க், வாஷிங்டன் மற்றும் லொஸ் ஏஞ்சல்ஸ் உள்ளிட்ட அமெரிக்காவின் அனைத்து முக்கிய நகரங்களிலும் தற்போது போராட்டங்கள் நடைபெற்று வருவதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

(எ)

## ஈரானில் தரைவழி தாக்குதலுக்கு பென்டகன் தயாராகி வருகிறது

*வாஷிங்டன், மார்ச் 30*

ஈரானில் தரைவழி இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொள்வதற்கு அமெரிக்கப் பாதுகாப்புத் தலைமையகமான பென்டகன் தயாராகி வருகிறது என்று “வாஷிங்டன் போஸ்ட” பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இது பல வாரங்களாக நீடிக்கக்கூடிய ஒரு பாரிய இராணுவ நடவடிக்கையாக அமையுமென அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கான போர்த் திட்டங்கள் அமெரிக்கப் பாதுகாப்புத் தலைமையகத்தினால் ஏற்கனவே தயாரிக்கப்பட்டு முடிந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இருப்பினும், இந்த நடவடிக்கைக்கு அமெரிக்க ஜனாதிபதி தனது அனுமதியை வழங்குவாரா இல்லையா என்பது குறித்து இதுவரை உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை என அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இதற்கு முன்னதாக சுமார் 4,000 மெரைன் படைவீரர்கள் மத்திய கிழக்கு பிராந்தியத்தை நோக்கிச் சென்றுள்ளதாக தகவல்கள் வெளியாகியிருந்தன. அத்துடன், அமெரிக்காவின் 82ஆவது வான்வழிப் படையின் பரசூட் படைவீரர்களும் இந்த இராணுவ நடவடிக்கைக்கு தயாராக உள்ளதாக அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ)

## அமெரிக்க பல்கலைக்கழகங்களை இலக்கு வைத்து தாக்கி அழிப்போம்

**ஈரான் புரட்சிகர பாதுகாப்பு படை எச்சரிக்கை**
**ஈரான் எச்சரிக்கை**

*தெஹ்ரான், மார்ச் 30*

மத்திய கிழக்கிலுள்ள இஸ்ரேலிய மற்றும் அமெரிக்கப் பல்கலைக்கழகங்களை இலக்கு வைக்கப்போவதாக ஈரானின் இஸ்லாமியப் புரட்சிகர பாதுகாப்புப் படை எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஈரானின் தெஹ்ரானில் அமைந்துள்ள அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டதைத் தொடர்ந்து இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதன்படி, பிராந்தியத்திலுள்ள அத்தகைய அனைத்துப் பல்கலைக்கழகங்களும் சட்டபூர்வமான இலக்குகளாகக் கருதப்படும் என்று அவர்கள் அறிவித்துள்ளனர்.

மத்திய கிழக்கிலுள்ள அமெரிக்கப் பல்கலைக்கழகங்களின் அனைத்துப் பணியாளர்கள், மாணவர்கள் மற்றும் அண்மித்த பகுதிகளில் வசிப்பவர்கள் அந்த இடங்களை விட்டு வெளியேறுமாறு ஈரானிய இஸ்லாமியப் புரட்சிகர பாதுகாப்புப் படை அறிவுறுத்தியுள்ளது.

பிராந்தியத்திலுள்ள அமெரிக்க நிறுவனங்கள் மீதான தாக்குதல்களைத் தவிர்ப்பதற்கு, ஈரான் பல்கலைக்கழகங்கள் மீதான குண்டுத் தாக்குதல்களை அமெரிக்கா கண்டிக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்தக் கண்டனத்தை இன்று 30ஆம் திகதி ஈரான் நேரப்படி நண்பகல் 12: 00 மணிக்கு முன்னதாக அமெரிக்கா தெரிவிக்க வேண்டும் எனவும் ஈரானியப் புரட்சிகர பாதுகாப்புப் படை அறிவுறுத்தியுள்ளது என்று சர்வதேச ஊடக தகவல்கள் மேலும் தெரிவித்துள்ளன.

(எ)

## பஹ்ரைன் அலுமினிய ஆலை மீது ஈரான் தாக்குதல்: இருவர் காயம்

*மனாமா, மார்ச் 30*

உலகின் மிகப்பெரிய அலுமினிய உற்பத்தி நிறுவனங்களில் ஒன்றான பஹ்ரைனின் அலுமினிய உற்பத்தி தொழிற்சாலை மீது ஈரான் தாக்குதல் நடத்தியுள்ளது.

இந்தத் தாக்குதலில் தொழிற்சாலையின் ஊழியர்கள் இருவர் சிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். ஏற்பட்டுள்ள சேத விவரங்கள் குறித்து நிறுவனம் தற்போது கணக்கிட்டு வருவதுடன், ஊழியர்களின் பாதுகாப்பே தங்களது முதன்மையான பொறுப்பு என்றும் தெரிவித்துள்ளது.

(எ)

## அவசரகால நிலை...

சட்டத்தின் 2ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக இந்த நீடிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நாட்டில் பொது அமைதியைப் பேணுதல், பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் மற்றும் மக்களின் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் சேவைகளைத் தடையின்றி வழங்குவதை உறுதி செய்யும் நோக்கில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நாட்டைத் தாக்கிய “டித்வா” சூறாவளியினால் ஏற்பட்ட பாதிப்புகளிலிருந்து நாடு இன்னும் முழுமையாக மீளாத நிலையில், நிவாரணப் பணிகள் மற்றும் அத்தியாவசிய சேவைகளைத் தடையின்றி முன்னெடுக்க இந்த அவசரகாலச் சட்டம் அவசியமென அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதனுடன் தொடர்புடைய மற்றுமொரு வர்த்தமானி மூலம் மின்சாரம், எரிபொருள் விநியோகம், சுகாதாரம் மற்றும் பொதுப் போக்குவரத்து உள்ளிட்ட 15க்கும் மேற்பட்ட சேவைகள் தொடர்ந்தும் அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




**மேடம்**
எதிர்ப்புகள் அடங்கும். பழைய கடனில் ஒரு பகுதியை பைசல் செய்வீர்கள். பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டு. தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**இடபம்**
குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். சொத்துப் பிரச்சினைக்கு நல்ல தீர்வு கிடைக்கும். புது வாகனம் வாங்குவீர்கள். உறவினர்கள் வீடு தேடி வருவார்கள்.

**மிதுனம்**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் அதிகரிக்கும். அழகும் இளமையும் கூடும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும்.

**கடகம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் ஒரே நாளில் முக்கியமான நான்கைந்து வேலைகளை பார்க்க வேண்டி வரும். நீங்கள் நகைச்சுவைக்காக சொல்ல கூடிய கருத்துக்கள் கூட சீரியசாக வாய்ப்பிருக்கிறது.

**சிம்மம்**
விவாதங்களை தவிர்ப்பது நல்லது. குடும்பத்தைப் பற்றிய கவலைகள் வந்து நீங்கும். திடீர் பயணங்கள் செலவுகளால் திணறுவீர்கள். வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும்.

**கன்னி**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். உடன்பிறந்தவர்கள் பாசமழை பொழிவார்கள். நெடுநாட்களாக நீங்கள் பார்க்க நினைத்த ஒருவர் உங்களை தேடி வருவார். சிறப்பான நாள்.

**துலாம்**
உணர்ச்சி வசப்பட்டு பேசுவதை விட்டு அறிவுப் பூர்வமாகப் பேசுவீர்கள். செயல்படுவீர்கள். திடீர் முடிவுகள் எடுப்பீர்கள். உறவினர் நண்பர்கள் உங்களுக்கு முக்கியத்துவம் தருவார்கள்.

**விருச்சிகம்**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். பழைய பிரச்சினைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள். புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

**தனுசு**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலேயே தாழ்வு மனப்பான்மை தலைத்தூக்கும். உறவினர் முன்கோபத்தால் பகை உண்டாகும். சகிப்புத் தன்மை தேவைப்படும் நாள்.

**மகரம்**
மூத்த சகோதர வகையில் உதவிகள் உண்டு. விலை உயர்ந்த பொருட்கள் வாங்குவீர்கள். மனைவி வழியில் உறவினர்கள் மதிப்பார்கள். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும்.

**கும்பம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். அமோகமான நாள்.

**மீனம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். அக்கம்-பக்கம் வீட்டாரின் அன்புத் தொல்லை குறையும். வேற்று மதத்தவர்கள் நண்பர்கள் ஆவார்கள். கனவு நனவாகும் நாள்.

### பயணிகளுடன் தரக்குறைவாக நடந்த

# தனியார் பஸ் நடத்துநருக்கு எட்டு நாட்கள் பணித்தடை!

யாழ்ப்பாணம், மார்ச் 30

பயணிகளுடன் தரக்குறைவாக நடந்து கொண்டமை உள்ளிட்ட இருவேறு குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் தனியார் பஸ் நடத்துநருக்கு எட்டு நாட்கள் பணித்தடை விதிக்கப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் சூ. விமலேஸ்வரன் தெரிவித்தார்.

கடந்த 07. 03. 2026 அன்று அதிகார சபையின் திடீர் பரிசோதனை உத்தியோகத்தர்கள், பஸ்ஸில் பரிசோதனையில் ஈடுபட்டபோது,

குற்றப்பத்திரிகை வழங்க அனுமதிப்பத்திரத்தைக் கோரிய அதிகாரிகளை குறித்த நடத்துநர் அவமதித்துள்ளார். அத்துடன், 26.03.2026 அன்று காலை பரந்தனிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட சேவையின்போது அவர் தரக்குறைவாகப் பேசியுள்ளமையும் விசாரணைகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், குறித்த நபரின் சுய ஒழுக்க மீறல் மற்றும் வடமாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையில் நடத்துநராகவோ சாரதியாகவோ கடமையாற்றத் தகுதியற்றவர் என இனங்காணப்பட்டமையால், அவருக்கு வடக்கு மாகாணத்தில் எந்தவித பயணிகள் பஸ்ஸிலும் கடமையாற்ற முடியாதவாறு 8 நாட்கள் தொடர்ச்சியான பணித்தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தடையை மீறிச் செயல்பட்டால், குறித்த நபருக்கும் அவ ரைச் சேவையில் ஈடுபடுத்தும் பஸ் உரிமையாளருக்கும் எதிரா கக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையால் இவ்வாறான ஒழுக்க மீறல்கள் மற்றும் விதி மீறல்களுக்கு எதிராக முன்னரும் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளன. பொதுப் போக்குவரத்தின் போது பயணிகள் எவ்வித அசௌகரியங்களை எதிர்கொண்டாலோ அல்லது நடத்துநர்கள் மற்றும் சாரதிகளின் தரக்குறைவான செயல்பாடுகள் அவதானிக்கப்பட்டாலோ, அது தொடர்பான முறைப்பாடுகளை உரிய ஆதாரங்களுடன் (ஒளிப் படங்கள் அல்லது காணொலிகள்) 071, 9090900 என்ற வட்ஸ்அப் இலக்கத்துக்கு பொதுமக்கள் உடனடியாகத் தெரியப்படுத்த முடியும் என்று அதிகார சபையின் தலைவர் அறிவித்துள்ளார். (எ-03)

# கைத்தொழிலாளர்களுக்காக “நில வங்கி” உருவாக்கப்படும்

## அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி அறிவிப்பு

பொலநறுவை, மார்ச் 30

தொழிலதிபர்களுக்குத் தேவையான காணிகளை இலகுவாக வழங்குவதற்காக “நில வங்கி“ உருவாக்கப்படும் என்று அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி தெரிவித்தார். பொலநறுவை மற்றும் மாத்தளை மாவட் டங்களில் நடைபெற்ற தொழில் மேம்பாட்டுக் குழுக் கூட்டங்களில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில், தொழில் துறையை மேம்படுத்த இம்முறை 97 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. தற்போதைய எரிபொருள் நெருக்கடிக்கு உரிய தீர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. தொழில் அமைச்சில் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளுக்கு கியூ. ஆர். குறியீடு மூலம் எரிபொருள் தடையின்றி கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், தொழிலதிபர்கள் எதிர்கொள்ளும் கடன் வசதிகள் மற்றும் ஏனைய நிர்வாகப் சிக்கல்களுக்கு நிதி அமைச்சின் ஊடாக விரைவான தீர்வு எட்டப்படும் எனவும் அமைச்சர் உறுதியளித்தார். (எ)

## சேவையை முடக்கி போராடுவோம்: இ. போ. ச. ஊழியர்கள் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 30

யாழில் இ.போ.சவின் இறைமையுள்ள நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ள பொது மலசலகூடத்தை நிர்வகிப்பது தொடர்பில் யாழ். மாநகர சபைக்கும் இ.போ.சவுக்கும் இடையே ஏற்பட்டுள்ள குழப்ப நிலை பெரும் பிரச்னையாக மாறியதால் யாழ். மத்திய பஸ் நிலையத்தில் சிலமணி நேரம்பெரும்பரபரபு ஏற்பட்டது.

நேற்று முன்தினம் காலை யாழ். மாநகர சபையின் ஊழியர்கள் குறித்த மலசல கூடத்தொகுதிக்கு நீர் இணைப்பை வழங்கும் நோக்குடன் சென்றிருந்த நிலையில் அவர்கள் இ.போ. சபையினரால் தடுக்கப்பட்டதை அடுத்தே பிரச்னை உருவானது.

முன்பதாக பல்வேறு தரப்பினரது கோரிக்கையின் அடிப்படையில் கடந்த ஆட்சிக்காலத்தில் இ.போ.சவினால் இந்த பொது மலசலகூட கட்டட நிர்மாணத்துக்காக யாழ். ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் திட்ட மொழிவு செய்யப்பட்டு அதற்கான அனுமதியும் வழங்கப்பட்டிருந்தது.

யாழ். மத்திய பஸ் நிலையத் துக்கென குத்தகை ஒப்பந்தம் செய்யப்பட்ட இ.போ.சவின் ஆளுகைக்குட்பட்ட நிலப்பரப்பிலேயே இந்த மலசலகூடம் அமைக்கப்பட்டது. அத்துடன் பொது மலசலகூடம் கட்டுவதற்கான அனுமதியையும் இ.போ.ச விடம் யாழ். மாநகர சபை கோரி பெற்றே இத்திட்டம் நிறைவுறுத்தப்பட்டது.

இந்த நிலையில் கடந்த 13 ஆம் திகதியன்று குறித்த மலசல கூட தொகுதியை குத்தகைக்கு விடுவதற்கான விண்ணப்பத்தை யாழ். மாநகரசபை பத்திரிகை மூலம் கோரியிருந்தது.

இது குறித்து குறித்த தரப்புக்கும் கடிதம் அனுப்பியுள்ளது.

இதற்கு குறித்த நிலப் பரப்பை யாழ். பிரதேச செயலகம் தம்மிடம் பாரப்படுத்தியுள்ளதாக மாநகரசபை தெரிவித்ததாக கூறப்படுகின்றது.

எமக்குரிய நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ள இந்த பொது மலசலகூடத்தை தன்னிச்சையாக நிர்வகிக்க மாநகரசபை முயன்றால் நாம் சேவையை முடக்கிப் போராடி எமக்கான நீதியைப் பெறுவோம் என்று இ. போ. ச. ஊழியர்கள் தெரிவித்தனர். (எ)

## வாகன பந்தயம்: 11 பேர் கைது

கொழும்பு, மார்ச் 30

பிலியந்தலை - கெஸ்பேவ மாற்று வீதியில், பணத்துக்காக மோட்டார் சைக்கிள் மற்றும் ஓட்டோ பந்தயங்களில் ஈடுபட்ட 11 இளைஞர்களை பிரதேச மக்களின் உதவியுடன் நேற்று ஞாயிற்றுக்கிழமை கைது செய்ததாக பிலியந்தலை பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட இளைஞர்களிடமிருந்து 12 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் இரண்டு ஓட்டோக்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

வட்ஸ்அப் குழுவொன்றின் ஊடாக விடுக்கப்பட்ட அறிவித்தலுக்கமைய, கெஸ்பேவ மாற்று வீதியில் ஒன்று கூடிய இந்த இளைஞர்கள், பணத்தை பந்தயமாக வைத்து இந்த சட்டவிரோத வாகன போட்டிகளில் ஈடுபட்டனர் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

பொலிஸார் முற்றுகையிட்ட போது, அங்கிருந்த சிலர் தமது மோட்டார் சைக்கிள்களை அவ்விடத்திலேயே கைவிட்டு தப்பி சென்றதாகவும், அவர்களை கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நெருக்கடியை எதிர்கொள்ள எந்த திட்டங்களையும் வகுக்கவில்லை

## அரசாங்கம் மீது சஜித் சாடல்

கொழும்பு, மார்ச் 30

பல துறைகளில் நாடு கடும் நெருக்கடி நிலையை எதிர் கொண்டு வருகின்றது. மத்திய கிழக்கு போர் உருவாவதற்கு நாம் காரணமாக இல்லாவிட்டாலும், இந்த போர் நிலை பல சவால்களை எமக்கும் உருவாக்கியுள்ளது. இந்தப் போர் 3 வாரங்களுக்கு முன்பு தான் ஆரம்பித்தது என்று பலர் நினைத்தாலும், கடந்த ஆண்டு ஜூன் மாதத்திலிருந்தே அமெரிக்கா இஸ்ரேலுடன் இணைந்து ஈரான் மீது தாக்குதல் நடத்தியது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

களனிப் பிரதேசத்தில் இடம்பெற்ற மக்களைத் தெளிவூட்டும் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இதைவிட மோசமான போர்ச்சூழலொன்று வரும் என்று முன்கூட்டியே கணிக்க வேண்டியிருந்தும் இந்த அரசாங்கம் அதை செய்யவில்லை.

ஈரான் மீதான தாக்குதல், வெனிசுலா ஜனாதிபதியை அமெரிக்க இராணுவம் கைது செய்தது, கியூபாவில் நடந்த உள்நாட்டு பிரச்னைகள், எண்ணெய் கப்பல்கள் நுழைய அனுமதிக்காமல் இருந்தமை உள்ளிட்ட பல பிரச்னைகள் எழுந்தன.

ஒரு நாட்டை ஆளும்போது உலகில் நடப்பவற்றை புரிந்து கொள்ள வேண்டும். சூழ நடக்கும் விடயங்களை தெரிந்து கொள்ள வேண்டும். அமெரிக்க ஜனாதிபதியின் சர்வதேச கொள்கையை பார்க்கும்போது மத்திய கிழக்கு போர் நிலையை முன்கூட்டியே கணித்திருக்க முடியும். ஆனால், இந்த அரசாங்கம் அதை செய்யவில்லை.- என்றார். (எ)

போதைப்பொருள் கடத்தல்:

# இந்தியாவுக்கு தப்பிச்சென்ற தந்தை மற்றும் மகன் கைது!

கொழும்பு, மார்ச் 30

போதைப்பொருள் கடத்தலுக்கு உதவிய குற்றச்சாட்டில் தேடப்பட்டு வந்த இருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

கடந்த ஜனவரி 29ஆம் திகதி கணேமுல்ல பொலிஸ் பிரிவில் 04 கிலோ 423 கிராம் கொக்கெய்ன் மற்றும் 3,450 போதை மாத்திரைகளுடன் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டார். இந்தக் கடத்தலுக்கு குறித்த பெண்ணின் கணவர் மற்றும் மகன் ஆகியோர் உடந்தையாக இருந்தமை விசாரணைகளில் தெரிய வந்தது.

சந்தேகநபர்கள் இருவரும் கடல் மார்க்கமாக இந்தியா வுக்கு தப்பிச் சென்றிருந்த நிலையில், கடந்த 24ஆம் திகதி இந்திய பாதுகாப்புப் பிரிவினரால் அங்கு கைது செய்யப் பட்டனர்.

குறித்த நபர்கள் இந்திய அதிகாரிகளால் நேற்று முன்தினம் சனிக்கிழமை இலங்கைக்கு கொண்டுவரப்பட்டனர். இதன் போது, கட்டுநாயக்க விமான நிலைய வருகை முனையத்தில் வைத்து குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் சந்தேகநபர்கள் கைது செய்யப் பட்டனர். (எ)

# இருவேறு பகுதிகளில் விபத்து: சிறுவன் உட்பட மூவர் பலி!

கொழும்பு, மார்ச் 30

நாட்டின் இருவேறு பகுதிகளில் இடம்பெற்ற வாகன விபத்துக்களில் 7 வயது சிறுவன் உட்பட மூன்று பேர் உயிரிழந்தனர்.

குச்சவெளி பொலிஸ் பிரிவுக் குட்பட்ட திருகோணமலை - புல்மோட்டை வீதியில், நேற்று முன்தினம் சனிக்கிழமை மதியம் இடம்பெற்ற விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் உயிரிழந்தனர்.

திருகோணமலையிலிருந்து குச்சவெளி நோக்கி பயணித்த கப் ரக வாகனமொன்று, எதிரே வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் இந்த விபத்து நேர்ந்தது.

இந்த விபத்தில் பலத்த காயமடைந்த மோட்டார் சைக்கிள் சாரதியும் அதில் பயணித்தவரும் குச்சவெளி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்தனர்.

உயிரிழந்தவர்கள் திரியாய பகுதியைச் சேர்ந்த 65 மற்றும் 75 வயதுடையவர்கள் என அடையாளம் காணப்பட்டனர்.

இதேவேளை, குடாஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தணமல்வில - வெல்லவாய வீதியில், சனிக்கிழமை மாலை இடம்பெற்ற விபத்தில் ஓட்டோவில் பயணித்த 7 வயது சிறுவன் ஒருவர் உயிரிழந்தார்.

வெல்லவாயவிலிருந்து தணமல்வில நோக்கி பயணித்த லொறி ஒன்று, எதிரே வந்த ஓட்டோவில் மோதியதில் இந்த விபத்து நேர்ந்தது.

இந்த விபத்தில் ஓட்டோவில் பயணித்த சிறுவன் பலத்த காயமடைந்து தணமல்வில மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக எம்பிலிப்பிட்டிய மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

உயிரிழந்த சிறுவன் கொட்டியாகல பகுதியைச் சேர்ந்த 07 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்துடன் தொடர்புடைய லொறியின் சாரதி கைது செய்யப்பட்டார்.(எ)

# போதைப்பொருளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது!

கம்பஹா, மார்ச் 30

பேலியகொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நுஹே வீதி பகுதியில் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப் பட்டார்.

சனிக்கிழமை மாலை இந்தச் சம்பவம் பதிவானது.

இதன்போது, சந்தேகநபரிட மிருந்து ஒரு கிலோ 642 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் கொழும்பு 12 பகுதியைச் சேர்ந்த 37 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

பேலியகொடை பொலிஸார் இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)




# பஸ்ஸினுள் திருத்தப்பட்ட கட்டண பட்டியல் கட்டாயம்

கொழும்பு, மார்ச் 30

திருத்தப்பட்ட புதிய பஸ் கட்டணப் பட்டியலை பஸ்ஸினுள் பயணிகள் பார்க்கும் வகையில் காட்சிப்படுத்துவது கட்டாயம் என்று மேல் மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை அறிவித்துள்ளது.

பயணிகள் சேவை அனுமதிப்பத்திர நிபந்தனை படி இது கட்டாயமாக்கப்பட் டுள்ளது. இது குறித்து அதிகார சபை வெளியிட்டுள்ள அறிக்கையில்,

பஸ்ஸினுள் கட்டணப் பட்டியலைக் காட்சிப்படுத்தத் தவறும் பஸ்களின் அனுமதிப் பத்திரங்கள் தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக இரத்து செய்யப்படும். அத்தோடு, அபராதம் விதிக்கப்படும்.

இது தொடர்பான சுற்றிவளைப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த 23ஆம் திகதி நள்ளிரவு முதல் அமலுக்கு வரும் வகையில் பஸ் கட்டணங்கள் 12.19 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டன.

இதற்கான அமைச்சரவை அங்கீகாரமும் கிடைத்துள்ளது.

குறைந்தபட்ச பஸ் கட்டணம் 27 ரூபாயிலிருந்து 30 ரூபாய் வரை அதிகரிக்கப்பட்டது.

அதிகபட்ச பஸ் கட்டணம் 2,159 ரூபாயிலிருந்து 2,422 ரூபாய் வரை அதிகரிக்கப்பட்டது. (ரூ. 263 அதிகரிப்பு)

நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை விட மேலதிகமாக அறவிடும் பஸ் உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழு எச்சரித்துள்ளது.

அதிக கட்டணம் வசூலிக்கும் பஸ்கள் தொடர்பில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 1955 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துக்கு அல்லது 071, 2595555 என்ற வட்ஸ்எப் இலக்கத்துக்கு முறைப்பாடு செய்ய முடியும் என்றும் குறித்த ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சொத்து விவரங்களை சமர்ப்பிக்க புதிய டிஜிற்றல் முறை அறிமுகம்

## ஊழல் ஒழிப்பு நடவடிக்கையில் பாரிய மாற்றம்

கொழும்பு, மார்ச் 30

இலங்கையில் சொத்து மற்றும் பொறுப்பு விவரங்களை சமர்ப்பிப்பதற்கான புதிய மத்திய டிஜிற்றல் முறைமையை அறிமுகப்படுத்த இலஞ்ச அல்லது ஊழல் விசாரணை ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

நாளை 31 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அமைந்துள்ள சர்வதேச கற்கைகள் நிலைய கேட்போர் கூடத்தில் இந்த டிஜிற்றல் முறைமை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இதுவரை காலமும் அச்சிடப்பட்ட படிவங்கள் ஊடாக கைகளால் பூர்த்தி செய்யப்பட்ட முறைமைக்கு பதிலாக, இனிவரும் காலங்களில் இணைய வழியில் தகவல்களை பதிவேற்ற முடியும்.

தவறான தகவல்களை சமர்ப்பித்தல் மற்றும் அசாதாரண சொத்து குவிப்புகளை கண்டறிவதற்கான விசேட சரிபார்ப்பு வசதிகள் இந்த முறைமையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கீழ், சொத்து விவரங்களை வெளிப்படுத்துவதை உறுதிப்படுத்தும் ஒரு முக்கிய தொழில்நுட்பத் தேவையாக இது கருதப்படுகிறது.

இந்த முறைமையின் ஊடாக இலங்கையின் ஊழல் ஒழிப்பு நடவடிக்கைகளில் நவீனமயமாக்கல், சுயாதீனத்தன்மை மற்றும் வினைத்திறன் ஆகியவை மேலும் வலுப்பெறும் என்று இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு நம்பிக்கை வெளியிட்டுள்ளது. (எ)

# "மருத்துவமனை புனரமைப்பு பணிகள் துரிதப்படுத்தப்படும்"

இரத்தினபுரி, மார்ச் 30

வளமான நாடு அழகான வாழ்க்கை என்ற தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கொள்கைக்கு அமைய ஆரோக்கியமான சமூகத்தை கட்டியெழுப்பும் வகையில் மலையகத்தில் கைவிடப்பட்ட நிலையில் காணப்படும் மருத்துவமனைகளை புனரமைக்கும் பணிகள் தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

2026 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் பெருந்தோட்ட மருத்துவமனைகளை புனரமைப்பதற்காக அரசாங்கத்தால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் இரத்தினபுரி- ஹப்பகஸ்தென்ன தோட்ட மருத்துவமனையும் 45 இலட்சம் ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்டு வருகிறது. இந்த மருத்துவமனையின் புனரமைப்பு பணிகளை பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் சு. பிரதீப் மேற்பார்வை செய்தார். இதன்போதே தோட்டப்புற மருத்துவமனைகளை புனரமைக்கும் பணிகள் துரிதப்படுத்தப்படும் என்று கூறினார்.

அத்தோடு மருத்துவமனைக்கு தேவையான மருத்துவர்கள் மற்றும் ஏனைய வசதிகளை வெகு விரைவாக பெற்றுக் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப் படவுள்ளதாகவும் பிரதி அமைச்சர் மேலும் தெரிவித்தார். (எ)

# பாடசாலை மாணவன் மீது வகுப்பறைக்குள் தாக்குதல்

நுவரெலியா, மார்ச் 30

ஹற்றன் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றின் வகுப்பறைக்குள் மாணவர் ஒருவர் மீது தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பில் இரண்டு மாணவர்கள் மற்றும் ஒரு பழைய மாணவன் என மூன்று பேர் ஹற்றன் தலைமையக பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

குறித்த பாடசாலையில் 10ஆம் தரத்தில் கல்வி பயிலும் இரு மாணவர் குழுக்களுக்கிடையே கடந்த மூன்று வாரங்களுக்கு முன்னர் மோதல் ஏற்பட்டுள்ளது. இந்த மோதலில் பாடசாலையின் பழைய மாணவர் ஒருவரும் தொடர்புபட்டுள்ளதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

ஆரம்பத்தில் இந்த விவகாரம் பாடசாலை மட்டத்தில் முடித்து வைக்கப்பட்டிருந்தது. எனினும், தாக்குதல் நடத்தப்படும் காட்சிகள் அண்மையில் சமூக வலைத்தளங்களில் வைரலாக பரவியது.

இதனைத் தொடர்ந்து, பாதிக்கப்பட்ட மாணவனின் தாய் நேற்று முன்தினம் ஹற்றன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். குறித்த முறைப்பாட்டின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளையடுத்து, தாக்குதலில் ஈடுபட்டதாக கூறப்படும் இரு மாணவர்கள் மற்றும் ஒரு பழைய மாணவன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

தாக்குதலுக்குள்ளான மாணவன் டிக்கோயா ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். (எ)

# சிகரெட்கள் கைப்பற்றல்: பொதிகளை கைவிட்டு தப்ப முயன்றவர் சிக்கினார்

கொழும்பு, மார்ச் 30

ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தின் ஷார்ஜாவிலிருந்து நாட்டுக்கு கடத்தி வரப்பட்ட சுமார் 30 இலட்சம் ரூபாய் பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்களுடன் இலங்கை பிரஜை ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்.

ஷார்ஜாவிலிருந்து எயார் அரேபியா விமானம் மூலம் இலங்கை வந்த 32 வயது நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

விமான நிலைய வருகை முனையத்தில் கடமையில் இருந்த சுங்க அதிகாரிகளை கண்டதும் அச்சமடைந்த குறித்த நபர், தனது பயணப் பொதிகளை அங்கேயே கைவிட்டுவிட்டு தப்பியோட முயற்சித்தார்.

இதன்போது சுங்க அதிகாரிகளால் மடக்கிப் பிடிக்கப்பட்ட சந்தேகநபரின் பயணப் பொதிகளை சோதனையிட்ட போது, அவற்றுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 20,200 சிகரெட்கள் அடங்கிய 101 சிகரெட் கார்ட்டூன்கள் கைப்பற்றப்பட்டன.

மேலும், கைது செய்யப்பட்ட சந்தேகநபர் மற்றும் கைப்பற்றப்பட்ட சிகரெட் தொகுதி தொடர்பில் கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (எ)

# 88 ஆயிரம் வெளிநாட்டு சிகரெட்கள் பறிமுதல்!

## 3 சீனர்கள் உட்பட நால்வர் கைது




கொழும்பு, மார்ச் 30

சுமார் ஒரு கோடியே 32 இலட்சம் ரூபாய் பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்களை சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கடத்தி வர முயன்ற இலங்கையர் ஒருவர் உட்பட நால்வர் கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகளால் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கைது செய்யப்பட்டனர்.

கொழும்பை சேர்ந்த 33 வயதுடைய வர்த்தகர் ஒருவரும், கொழும்பு "போர்ட் சிற்றி" திட்டத்தில் பணிபுரியும் சீனப் பெண் ஒருவர் மற்றும் இரு சீன ஆண்களும் அடங்குவர்.

டுபாயிலிருந்து எமிரேட்ஸ் விமான சேவைக்கு சொந்தமான விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த இவர்கள் அதிகாரிகளிடம் சிக்கினர்.

இவர்கள் கொண்டு வந்த 6 பயண பொதிகளை சோதனையிட்ட போது, அவற்றுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த வெளிநாட்டு தயாரிப்பான "மென்செஸ்டர்" வகை 88,000 சிகரெட்கள் அடங்கிய 440 கார்ட்டூன்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள் முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# நீதிமன்ற வரலாற்றில் புரட்சிகர நடைமுறை

கொழும்பு, மார்ச் 30

இலங்கை நீதிமன்ற வரலாற்றில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில், காகிதப் பயன்பாடற்ற டிஜிற்றல் அடிப்படையிலான வழக்கு விசாரணை உயர் நீதிமன்றத்தில் முதன்முறையாக நடைபெற்றது.

தலைமை நீதியரசர் பிரீதி பத்மன் சூரசேன தலைமையில், நீதியரசர்களான அர்ஜுன ஒபேசேகர மற்றும் கலாநிதி சோபித ராஜகருணா ஆகியோரைக் கொண்ட நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் இந்த விசாரணை நடைபெற்றது. 2024ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் வினாத்தாள் கசிந்த விவகாரம் தொடர்பான அடிப்படை உரிமை மீறல் வழக்கின் தீர்ப்புக்கமைய, அரசாங்கத்துக்கு வழங்கப்பட வேண்டிய 3 மில்லியன் ரூபாய் நஷ்டஈட்டை வழங்கத் தவறியமைக்காக, நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டு குறித்த வழக்கினூடாக இந்த டிஜிற்றல் முறைமை பரிசீலிக்கப்பட்டது.

திறந்த நீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, வழக்கமான காகிதக் கோப்புகளுக்குப் பதிலாக உயர் நீதிமன்றத்தால் தயாரிக்கப்பட்ட டிஜிற்றல் கோப்புகளை நீதியரசர்கள் கணினி மூலம் பரிசீலித்தனர். பிரதிவாதிக்கு எதிரான நீதிமன்ற அவமதிப்பு குற்றப்பத்திரிகையை உயர் நீதிமன்ற பதிவாளர் மனோதி ஹேவாவசம் தெளிவுபடுத்தியதுடன், அதன் மீது டிஜிற்றல் கையொப்பமிட்டு அந்தக் குற்றப் பத்திரிகையைப் பெற்றுக் கொள்ளும்வசதி ஏற்படுத்தப்பட்டது. (எ)

# வெப்பச்சுட்டெண்ணும் வெப்பத்தாக்கமும் மே நடுப்பகுதியுடன் குறைவடையக்கூடும்

கொழும்பு, மார்ச் 30

வெப்பச் சுட்டெண்ணின் தாக்கத்தினால் நாடு முழுவதிலும் மனித உடலினால் அதிகரித்த வெப்பநிலை உணரப்படுகின்றது என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித் துள்ளது

வெப்பத் தாக்கமானது சூரியனின் அதிகரித்த வெப்பநிலையைக் குறிக்கும். பொதுவாக வெப்பமானது 40 பாகை செல்சியஸ்ஸிலும் அதிகரிக்கும் போதே வெப்பத் தாக்கம் ஏற்படுகிறது.

இலங்கையைப் பொறுத்த வரையில் தற்போது 36, 37 பாகை செல்சியஸ் அளவுகளில் வெப்பம் அதிகரித்து காணப்படுகிறது.

இந்த வெப்பநிலை அதிகரிப்பானது மே மாதம் நடுப்பகுதியுடன் குறைவடையக் கூடும். ஏனெனில் மே மாதம் முதல் தென்மேல் பருவப் பெயர்ச்சிக் காலநிலை ஆரம்பமாகும்.

தற்போது நாட்டில் நிலவிக்கொண்டிருப்து இடைப் பருவப் பெயர்ச்சிக் காலநிலை. ஏப்ரல் மாதம் அளவில் சூரியன் இலங்கைக்கு மேலாக உச்சம் கொடுப்பதனாலும் அதிகரித்த வெப்பநிலை காணப்படும்.

இவ்வாறான சூழ்நிலைகளில் மக்கள் அவதானமாக செயல்படுவதுடன் அதாவது வெப்பத்தினால் ஏற்படும் நீர் இழப்பை தவிர்த்துக் கொள்ள அடிக்கடி நீர் ஆகாரம் பருக வேண்டும், தேவை இல்லாமல் வெளியில் காலை 10.00 மணி முதல் மாலை 04.00 வரையில் நடமாடுவதை தவித்துக் கொள்ள வேண்டும், மெல்லிய நிற இறுக்கம் குறைந்த ஆடைகளை அணிந்து கொள்ள வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)




Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

## மத்திய கிழக்கு யுத்தம்...

நேற்று அவர் வெளியிட்டுள்ள விசேட உரையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இதன் பிரகாரம், பாப் அல் மந்தாப் நீரிணை வழியில் ஹவுதி அமைப்பினர் போர் களத்திற்கு வருவதால் பல தாக்கங்கள் நமது நாட்டில் நேரடியாக பாதிப்பை ஏற்படுத்தும்.

செங்கடல், மத்திய தரைக்கடல், அரேபியக் கடல், இந்தியப் பெருங்கடல் ஆகிய அனைத்தையும் இணைக்கும் இடமாக காணப்படுவதனால், இந்த நீரிணை வழியாக நடைபெறும் சரக்கு போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்படும்.

இதனால் எண்ணெய் விலை உயர்வு, கடல் வழி சரக்குகள் போக்குவரத்தில் தாமதங்கள் போன்றன ஏற்படலாம்.

இதனால் போக்குவரத்து கட்டணம், மின்சார கட்டணம் அதிகரித்து அன்றாட வாழ்க்கைச் செலவுகளும் அதிகரிக்கலாம்.

பாப் அல் மந்தாப் நீரிணையைத் தவிர்த்துச் செல்ல வேண்டுமெனில் நன்னம்பிக்கை முனையை பாறைக்குடாவைக் கடந்து செல்ல வேண்டும். இதனால் போக்குவரத்து மற்றும் காப்பீட்டு கட்டணங்கள் அதிகரிக்கும். போர் அபாயக் கட்டணங்கள் கூட அதிகரித்து கடுமையான தாக்கங்கள் ஏற்படும்.

இறக்குமதி செலவுகளும் அதிகரித்து, ஏற்றுமதி இலாப விகிதங்கள் கூட குறையலாம்.

நமது பொருட்களை வாங்குவோர் வேறு விநியோகஸ்தர்களை தேடுவதால் போட்டித்தன்மை காரணமாக அபாயங்கள் ஏற்படலாம்.

இந்த ஹூதி தாக்குதல்கள் மூலம் நமது நாடு எதிர்காலத்தில் அதிக செலவுகளை ஏற்க வேண்டியிருக்கும் என்பதால் அரசாங்கம் இதுகுறித்து உடனடி செயல்திட்டத்தை முன்னெடுக்க வேண்டும்.

இந்த நீரிணை மூடப்படுவதனால் ஏற்படும் பாதிப்பிற்கு அரசிடம் மாற்று செயற்திட்டம் அமைந்து காணப்பட வேண்டும்.

அரசாங்கம் இவற்றிற்கு தீர்வுகளை கொண்டிருக்க வேண்டும்.

இந்த சவால்களை எதிர்கொள்ள அரசாங்கத்திடம் செயற்திட்டமொன்று காணப்படவேண்டும்-என்றார்.

## சீன ஆய்வுக் கப்பலில்...

ஒருவரை மேற்கோள் காட்டி கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை கடற்பரப்பில் இருந்து சுமார் 700 கடல் மைல் தொலைவில் இருந்த இக்கப்பலில், சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்ட ஊழியர் ஒருவருக்கு அவசர சிகிச்சை தேவைப்படுவதாக விடுக்கப்பட்ட அபாய சமிக்ஞையை அடுத்து இலங்கை கடற்படை விரைந்து செயற்பட்டது.

கடற்படையினர் குறித்த நோயாளியை நாட்டின் கடல் எல்லைக்கு அருகில் வைத்து பொறுப்பேற்று, காலி தேசிய வைத்தியசாலையில் அனுமதித்தனர். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அவர் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

கடந்த 2023 ஆம் ஆண்டு இந்தக் கப்பல் கொழும்புத் துறைமுகத்திற்கு வருகை தந்திருந்தபோதிலும், இம்முறை இலங்கையில் நங்கூரமிடுவதற்கான எந்தவொரு கோரிக்கையையும் சீனா முன்வைக்கவில்லை எனத் தெரியவருகிறது.

2024 ஆம் ஆண்டு டிசெம்பர் முதல் வெளிநாட்டு ஆய்வுக்கப்பல்கள் இலங்கைக்கு வருவதற்கு தற்காலிக தடை விதிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், கடந்த வாரம் ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற "டொக்டர் பிரிட்ஜோப் நான்சன்" கப்பலுக்கு மாத்திரம் கடல்சார் ஆய்வுகளை மேற்கொள்ள விசேட அனுமதி வழங்கப்பட்டது.

வெளிநாட்டு ஆய்வுக்கப்பல்களின் வருகை தொடர்பில் பின்பற்றவேண்டிய நிலையான நடைமுறைகளை இலங்கை அரசாங்கம் தற்போது இறுதி செய்து வருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## இறக்குமதி செய்யப்படும்...

விலை குறைவாக இருந்தால், அது குறித்து உடனடியாக முறைப்பாடு செய்யுமாறு உற்பத்தியாளர்களிடம் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

பாதணிகள், டைல்ஸ், லைட்டர்கள் மற்றும் தீப்பெட்டிகள் போன்றவை விதிக்கப்பட்ட வரிகளை விடக் குறைவான விலையில் சந்தையில் விற்பனை செய்யப்படுகின்றன.

இவை சட்டவிரோதமான முறையில் நாட்டிற்குள் கொண்டுவரப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

இவ்வாறான முறைகேடுகள் குறித்து முறையாக ஆராய்ந்து முறைப்பாடு செய்வது உற்பத்தியாளர்களின் பொறுப்பாகும் என அவர் வலியுறுத்தினார்.

இந்த விவகாரத்தை அரசாங்கத்தால் மாத்திரம் முழுமையாகக் கட்டுப்படுத்த முடியாது எனவும், உற்பத்தியாளர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினர் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தையும் அமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டினார். (அ)

## உள்ளூர் உற்பத்திகளை...

மாத்தளை மாவட்டத்தில் உள்ள நாலந்தா மற்றும் களுதேவல கைத்தொழில் பேட்டைகளுக்கு மேற்கொண்ட விசேட கள விஜயத்தின் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இறக்குமதி செய்யப்படும் காலணிகள், டைல்ஸ், லைட்டர்கள் மற்றும் தீப்பெட்டிகள் போன்ற பொருட்கள், விதிக்கப்பட்ட வரிகளையும் மீறி உள்ளூர் உற்பத்தி விலையை விடக் குறைவான விலையில் சந்தையில் விற்பனை செய்யப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான பொருட்கள் சட்டவிரோதமான முறையில் நாட்டிற்குள் கொண்டு வரப்பட்டிருக்கலாம் என சந்தேகிப்பதாகத் தெரிவித்த அமைச்சர், இது குறித்து முறைப்பாடுகளை வழங்குமாறு கைத்தொழில் அதிபர்களிடம் கோரிக்கை விடுத்தார்.

இவ்வாறான மோசடிகளைக் கட்டுப்படுத்துவது அரசாங்கத்தினால் மாத்திரம் செய்யக்கூடிய காரியமல்ல எனவும், உற்பத்தியாளர்கள் இது குறித்து விழிப்புடன் இருந்து முறையான புகார்களை முன்வைக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

உள்ளூர் கைத்தொழில்துறையினரைப் பாதுகாப்பதற்காக எதிர்காலத்தில் புதிய சட்டக் கட்டமைப்புகள் உருவாக்கப்படும் எனவும் இதன்போது அமைச்சர் உறுதி அளித்தார். (அ)

## இந்திய வரி முறையை...

மாறாக உலகளாவிய மட்டத்தில் ஏற்படும் திடீர் விலை மாற்றங்களின் போது சந்தையை ஸ்திரப்படுத்தவும், மேலதிக விலையேற்றங்களைத் தடுக்கவுமே ஆகும் எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை முன்னோக்கிச் செல்லும் போது, அரசாங்கம் தனது பொருளாதாரக் கொள்கைகளை மேலும் பலப்படுத்த வேண்டும் எனக் குறிப்பிட்ட அவர், "நிதிக் கட்டுப்பாடு முக்கியமானது என்றாலும், இந்தியாவின் வளர்ச்சியை மையமாகக் கொண்ட அணுகுமுறையைப் போல, அதிகப்படியான வரிச் சுமைகளைக் குறைப்பது முதலீடுகளை ஊக்குவிக்கவும், மக்களின் மீதான அழுத்தத்தைக் குறைத்து நீண்டகால பொருளாதார மீட்சிக்கு வழிவகுக்கும்" என்றும் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு 38,000 தொன் எரிபொருளை உரிய நேரத்தில் வழங்கியமைக்காக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும், இந்திய மக்களுக்கும் நாமல் ராஜபக்ஷ நன்றிகளைத் தெரிவித்துள்ளார்.

"நெருக்கடியான காலங்களில் அத்தியாவசியப் பொருட்கள் முதல் பொருளாதார உதவிகள் வரை வழங்கியதன் மூலம் இந்தியா இலங்கையின் முதன்மை உதவியாளராகத் திகழ்கிறது.

இது இந்தியாவின் "அயலகத்திற்கு முன்னுரிமை" கொள்கையின் உண்மையான பிரதிபலிப்பாகும். பிராந்தியத்தின் நலனுக்காக நாடுகள் மூலோபாயப் பங்காளிகளாக இணைந்து செயற்படுவது அவசியமானது," என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ)

## அனைத்து பிள்ளைகளுக்கும்...

அமரசூரிய தெரிவித்தார்.

இலங்கையின் இளம் தலைமுறையினரின் தொழில்நுட்பத் திறன்களைச் சர்வதேச மட்டத்திற்கு உயர்த்துவதனை நோக்கமாகக் கொண்டு, கொழும்பு புர்ஹானி சொண்டிப் சர்வதேச பாடசாலையில் நேற்று 28 நடைபெற்ற "உலக ரோபோ ஒலிம்பியாட்" தேசியப் போட்டியின் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வேகமாக மாறிவரும் இன்றைய உலகில் விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் (STEM) ஆகிய துறைகளில் கவனம் செலுத்துவது ஒரு நாட்டின் தேசிய முன்னுரிமையாக அமைய வேண்டும். உலக ரோபோ ஒலிம்பியாட் போன்ற வாய்ப்புகள், எமது இளம் தலைமுறையினருக்குத் தர்க்க சிந்தனை, புத்தாக்கம் மற்றும் ஒத்துழைப்பு போன்ற அத்தியாவசியத் திறன்களைப் பயிற்சி செய்வதற்கு ஒரு சிறந்த சந்தர்ப்பமாக அமைகின்றது. 2025ஆம் ஆண்டு சிங்கப்பூரில் நடைபெற்ற சர்வதேச ரோபோ ஒலிம்பியாட் போட்டியில் இலங்கை முதன்முறையாக இரண்டு அணிகளைப் பிரதிநிதித்துவப் படுத்தியது எமது பிள்ளைகளுக்குக் கிடைத்த மிக முக்கியமானதொரு அனுபவமாகும். நாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலும் உள்ள பிள்ளைகளுக்கும் இத்தகைய தொழில்நுட்ப வாய்ப்புகள் உரித்தாகும் வகையிலான கல்வி முறையை உருவாக்குவதே அரசாங்கத்தின் இலக்காகும்-என்றார். (அ)

## சிறுவனை காண...

தேடியும் கிடைக்காத நிலையிலேயே சிறுவனின் பெற்றோரால் வவுனியா நெளுக்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டினை பதிவுசெய்து தேடி வருகின்றனர்.

குறித்த சிறுவன் தொடர்பில் தகவல் ஏதும் அறிந்தால் சிறுவனின் தாயின் தொலைபேசி இலக்கமான 0768644938, 0772432175 ஆகியவற்றுக்கு அழைத்து உதவுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (அ)

## நாவற்குழி விகாரையின்...

விகாரைக்கு புதிதாக வந்த இளநிலை பிக்கு சிறுமியை துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கியுள்ளார்.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட சிறுமி தனது தாயாரிடம் தெரிவித்த நிலையில், தாயாரால் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் குறித்த இளநிலை பிக்குவை கைது செய்து சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற நீதவானின் வாசஸ்தலத்தில் முற்படுத்தியவேளை பிக்குவை எதிர்வரும் 2ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (அ)

## ஐந்து ஆண்டு கால...

குறிப்பிட்டது.

தற்போது நிலவும் எரிபொருள் தட்டுப்பாட்டைப் போக்க ரஷ்யாவிடம் அரசாங்கம் கோரிக்கை விடுத்ததற்குப் பதிலளித்துள்ள ரஷ்யா, 'ஆரம்ப கட்டமாக இரண்டு எரிபொருள் கப்பல்களை வழங்க முன்வந்துள்ளது. ஆனால், இந்த இரண்டு கப்பல்களைப் பெற்ற பிறகு, அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு ரஷ்யாவிடமிருந்து எண்ணெயைப் பெறுவதற்கான நிரந்தர ஒப்பந்தத்தில் இலங்கை கையெழுத்திடவேண்டும் என வலியுறுத்தியுள்ளது.

இந்த நிபந்தனைக்கு இலங்கை சம்மதித்தால் மட்டுமே, மேலதிக ஒப்பந்தங்களுக்காக ரஷ்ய அமைச்சர் மீண்டும் இலங்கைக்கு விஜயம் செய்வார்.

இருப்பினும், ரஷ்யா மீதான அமெரிக்காவின் தடைகள் தற்போது 30 நாட்களுக்கு மட்டுமே நீக்கப்பட்டுள்ள சூழலில், ஐந்து ஆண்டு கால ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவது இலங்கைக்குப் பாரிய இராஜதந்திர நெருக்கடியை ஏற்படுத்தலாம் என அஞ்சப்படுகிறது.

30 நாட்களுக்குப் பிறகு அமெரிக்கா மீண்டும் தடைகளை விதித்தால், ரஷ்யாவிடமிருந்து எண்ணெய் வாங்குவது சர்வதேச ரீதியில் இலங்கையைப் பாதிக்கலாம்.

இதற்கிடையில், அணுசக்தி திட்டத்தை மேம்படுத்தும் தொடர்ச்சியான முயற்சிகளின் ஒரு பகுதியாக, முதல் அணுமின் நிலையத்தை அமைப்பதற்கான ஐந்து சாத்தியமான தளங்களை இலங்கை அடையாளம் கண்டுள்ளதாக சர்வதேச அணுசக்தி நிறுவனம் 2025 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் உறுதிப்படுத்தியது.

அணுசக்தி உள்கட்டமைப்பை மேம்படுத்துவதில் இலங்கை குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை அடைந்துள்ளதாகக் குறிப்பிட்டிருந்த சர்வதேச அணுசக்தி நிறுவனம், குறிப்பாக உலை கொள்முதல் செய்வதற்கான ஒரு மேலாண்மை கட்டமைப்பை இலங்கை நிறுவியது டன், விரிவான அணுசக்தி சட்ட வரைவையும் உருவாக்கி, 2025-2044 ஆம் ஆண்டுக்கான தேசிய நீண்டகால எரிசக்தி திட்டத்தில் அணுசக்தியைச் சேர்த்துள்ளதையும் சுட்டிக்காட்டியது. ஆனால் ரஷ்ய தரப்பு இத்திட்டம் குறித்து கோரிக்கையை முன்வைத்தபோது தற்போதைய அரசாங்கம் அதனை நிராகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## 200 இற்கும் மேற்பட்ட...

நம்பகமான விநியோகஸ்தர்களைத் தெரிவு செய்வது பெரும் சவாலாக மாறியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மசகு எண்ணெய் மற்றும் டீசல் விநியோகத்திற்காக ஏற்கனவே இரண்டு முகவர்கள் தெரிவு செய்யப்பட்ட போதிலும், இறுதி உடன்படிக்கையில் கையெழுத்திடும் தருணத்தில் அவர்கள் பின்வாங்கியுள்ளனர்.

தற்போதைய உலகளாவிய சூழலில், கடலில் பயணிக்கும் எரிபொருள் தாங்கிக் கப்பல்களை அணுகி, அதிக விலை கொடுத்துக் கொள்வனவு செய்யும் ஒரு போட்டி நிலை உருவாகியுள்ளதால் இந்தத் தேக்கநிலை ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

எரிபொருள் நெருக்கடியைக் கையாளும் பொருட்டு, அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கொள்முதல் குழு தனது வழமையான நடைமுறைகளை மாற்றியமைத்துள்ளது.

வாரத்திற்கு ஒருமுறை கூடிய இக்குழு, தற்போது தேவைப்படின் ஒரே நாளில் இரண்டு தடவைகள் கூடி அவசர முடிவுகளை எடுத்து வருகின்றது. தரம் மற்றும் கொடுப்பனவு விதிமுறைகளைச் சரிபார்த்த பின்னரே தொழில்நுட்பக் குழுவிற்கு முன்மொழிவுகள் பரிந்துரைக்கப்படுகின்றன.

பெற்றோல் மற்றும் டீசலைப் பெற்றுக்கொள்வதில் பெரிய சிக்கல்கள் இல்லை என்றாலும், மசகு எண்ணெய் விநியோகத்தில் பின்னடைவு ஏற்பட்டுள்ளதை கூட்டுத்தாபனம் ஒப்புக்கொண்டுள்ளது.

கடந்த மார்ச் 26 மற்றும் ஏப்ரல் மாத தொடக்கத்தில் வரவேண்டிய மசகு எண்ணெய் கப்பல்கள் வருகை தருவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதனால் சப்புகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையத்தில் "உலை" எண்ணெய் தயாரிப்பது பாதிக்கப்படலாம் என்பதால், மேலதிக டீசல் மற்றும் ஒரு தொகுதி "உலை" எண்ணெயை நேரடியாகக் கொள்வனவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு

# இந்தியா-இலங்கை இடையே வலுவான பொருளாதார கூட்டு

## ஹர்ஷ டி சில்வா வலியுறுத்தல்



கொழும்பு, மார்ச் 30

இலங்கை தற்போதைய நெருக்கடிகளிலிருந்து மீள்வதற்கு இந்தியாவின் உதவிக்கு நன்றி தெரிவிப்பதோடு மட்டுமல்லாமல், இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார உறவை அடுத்த கட்டத்துக்கு கொண்டு செல்ல வேண்டுமென ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

எனவே இப்போதாவது இந்தியாவுடனான பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தம் (எட்கா) குறித்து தீவிரமாகப் பேசவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றை இட்டு ஹர்ஷ இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

அவரது பதிவில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது-

மீண்டும் ஒருமுறை பாரதப் பிரதமர் நரேந்திர மோடி எங்களைக் காப்பாற்ற முன்வந்துள்ளார், அவருக்கு மீண்டும் ஒருமுறை நன்றிகள். நாம் ஒவ்வொரு முறை துயரத்தில் இருக்கும்போதும் அவர்கள் உதவியக்கரம் நீட்டுகிறார்கள்.

இந்தியா - இலங்கை இடையிலான உறவை வலுப்படுத்துவதை பல தசாப்தங்களாக எதிர்த்து வந்தவர்கள், இப்போதாவது யதார்த்தத்தைப் புரிந்துகொள்வார்கள் என்று நம்புகிறேன். நாம் எப்போதும் உதவிக்காக மட்டுமே தொலைபேசியில் அழைத்து கேட்டுக்கொண்டிருக்க முடியாது.

நாம் உதவி என்பதற்கும் மேலாக அடுத்த கட்டத்துக்கு நகர வேண்டும். வலுவான மற்றும் இரு நாடுகளுக்கும் பரஸ்பரம் பயனளிக்கும் ஒரு கூட்டாண்மையை நாம் உருவாக்க வேண்டும். இந்த விவகாரத்தைச் சுற்றி வளைத்துப் பேசியது போதும், இப்போது பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தம் குறித்து தீவிரமாகப் பேசுவோம் நமது பொருளாதார இயந்திரங்களை ஒருங்கிணைப்பது குறித்துப் பேசுவோம்.

உற்பத்தி, சேவைகள், வலுசக்தி ஆகியவற்றில் இரு நாடுகளையும் இணைப்பது பற்றியும், தொலைதொடர்புகள் பற்றியும் பேசுவோம் நிச்சயமாக இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார அளவீட்டு வேறுபாடுகளைக் கருத்தில் கொண்டு ஒரு சமச்சீரற்ற கட்டமைப்பில் இதை முன்னெடுக்கலாம். இதற்கான வாய்ப்புகள் முடிவற்றவை. பழைய மலிவான அரசியல் வாதங்களைக் கடந்து செல்லும் அளவுக்கு நாம் முதிர்ச்சியடைவோம் என்று நம்புகிறேன்-என்றார். (அ)

# இந்தியாவின் ஒத்துழைப்புக்கு நன்றி கூறினார் அநுரகுமார!

## அவசர எரிபொருள் உதவிக்கு பாராட்டு

கொழும்பு, மார்ச் 30

மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள மோதல் நிலைமை காரணமாக நாடு எதிர்நோக்கியுள்ள வலுசக்தி பிரச்னைக்கு தீர்வாக இந்தியா வழங்கிய ஒத்துழைப்புக்களுக்கு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க இந்திய வெளிவிவகார அமைச்சருக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தனது உத்தியோகபூர்வ எக்ஸ் பதிவில் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவில் இருந்து இலங்கை மற்றும் இந்தியாவுக்கிடையில் எரிசக்தி ஒத்துழைப்பினை வலுப்படுத்தும் நோக்கில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி மற்றும் ஜனாதிபதி அநுரகுமாத திஸாநாயக்க ஆகியோருக்கிடையில் கடந்த வாரம் இடம்பெற்ற தொலைபேசி உரையாடலின் பிரதிபலனாக குறித்த எரிபொருள் தொகை நாட்டுக்கு கிடைக்கப் பெற்றுள்ளது.

இந்த நிலையில் நாடு எதிர்நோக்கியுள்ள வலுசக்தி பிரச்னைக்கு தீர்வாக இந்தியா வழங்கிய துரித ஒத்துழைப்புக்களுக்கு ஜனாதிபதி தமது நன்றியை தெரிவித்துள்ளார்.

38 ஆயிரம் மெற்றிக் தொன் எரிபொருளுடன் இந்திய கப்பல் நேற்று நாட்டை வந்தடைந்தது.

நாடு எதிர்நோக்கியுள்ள வலுசக்தி பிரச்னைக்கு தீர்வாக 20 ஆயிரம் மெற்றிக் தொன் டீசல் மற்றும்18 ஆயிரம் மெற்றிக் தொன் பெற்றோல் இந்தியாவினால் இலங்கைக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது. (அ)

# கியூ.ஆர். முறையில் மாற்றங்கள் புதிய வசதி விரைவில் அறிமுகம்!

கொழும்பு, மார்ச் 30

தேசிய எரிபொருள் அனுமதிப்பத்திர முறைமையை மேலும் எளிமைப்படுத்தும் நோக்கில், அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் தமது வாகனங்களை மொத்தமாகப் பதிவு செய்யக்கூடிய புதிய வசதி விரைவில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

டிஜிற்றல் பொருளாதார அமைச்சின் செயலாளர் வருண சிறீ தனபால இது குறித்து தெரிவிக்கையில்,

பெரிய அளவிலான வாகனங்களைக் கொண்ட நிறுவனங்கள், ஒவ்வொரு வாகனத்தையும் தனித்தனியாகப் பதிவு செய்வதற்குப் பதிலாக, ஒரே குழுவாகப் பதிவு செய்யும் வசதியை அமைச்சு உருவாக்கி வருகிறது.

இதுவரை சுமார் 6 மில்லியன் பயனாளர்கள் இந்த அமைப்பில் பதிவு செய்துள்ளனர். கடந்த மார்ச் 15 ஆம் திகதி முதல் இரண்டு வாரங்களில் மட்டும் சுமார் 2 மில்லியன் புதிய பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் தரவுத்தளத்தில் உள்ள தகவல்களுடன் முரண்பாடுகள் காணப்படுவதால், சுமார் 200,000 பயனாளர்கள் சில சிரமங்களை எதிர்கொள்ளக்கூடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இயந்திர எண்களை வாசிப்பதில் ஏற்படும் எழுத்துப் பிழைகளே (உதாரணமாக: "0" என்பதற்குப் பதில் "O") இதற்கு முக்கியக் காரணமாகும். இவை தற்போது உடனுக்குடன் சரிசெய்யப்பட்டு வருகின்றன.

ஆரம்பக் கட்டத்தில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறுகள் சரிசெய்யப்பட்டுள்ளதால், தற்போது பயனாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்த போதிலும் கட்டமைப்பு ஸ்திரமாக உள்ளது-என்றார்.

வாகனங்கள் அல்லாத ஏனைய அத்தியாவசியத் துறைகளுக்கும் இந்த கியூ.ஆர். முறைமை விரிவுபடுத்தப்படவுள்ளது. விவசாய உபகரணங்கள் மற்றும் கடற்றொழில் படகுகளை இந்த அமைப்பில் இணைப்பதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இது அந்தந்தத் துறையினருக்கு எரிபொருளைப் பெற்றுக்கொள்வதில் பெரும் நிவாரணத்தை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

# குருநகரில் வாள்வெட்டு: தடுக்க வந்த தாயும் காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 30

குருநகர் பகுதியில் நேற்று முன் தினம் சனிக்கிழமை மாலை இரு நபர்களுக்கிடையே ஏற்பட்ட தனிப்பட்ட மோதல், ஒரு கொடூரமான வன்முறைச் சம்பவமாக மாறியுள்ளது.

இருவருக்கிடையே நிலவிய கருத்து வேறுபாடு முற்றிய நிலையில், ஒருவர் மற்றவர் மீது கத்தியால் சரமாரியாகத் தாக்குதல் நடத்தியுள்ளார். இந்தத் தாக்குதலைத் தடுக்க முயன்ற காயமடைந்த இளைஞனின் தாயார் மீதும் தவறுதலாக கத்தி வெட்டு விழுந்துள்ளது.

படுகாயமடைந்த இளைஞர் மற்றும் அவரது தாய் ஆகிய இருவரும் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தாக்குதலை மேற்கொண்ட நபர், இச்சம்பவத்தின் பின்னர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் நேரடியாகச் சென்று சரணடைந்துள்ளார். (அ)

# இலங்கைக்கு அவசர எரிபொருள் இந்தியாவுக்கு நன்றி கூறிய சஜித்

கொழும்பு, மார்ச் 30

இலங்கைக்கு அவசர எரிபொருள் விநியோகத்தை வழங்க முன்வந்த இந்தியாவுக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தனது நன்றிகளைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது உத்தியோகபூர்வ எக்ஸ் வலைத்தளப் பக்கத்தில் பதிவொன்றை வெளியிட்டுள்ளார்.

அந்தப் பதிவில் அவர்,

"அவசரகால எரிபொருள் ஒத்துழைப்பை வழங்கியமைக்காக இந்தியாவிற்கு நாம் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம். உறவுகள் என்பது சௌகரியமான காலங்களில் அல்ல, மாறாக இக்கட்டான நெருக்கடி காலங்களிலேயே சோதிக்கப்படுகின்றன என்பதை இது நினைவூட்டுகின்றது." மேலும், தேவை ஏற்பட்ட தருணத்தில் எமக்கு உறுதுணையாக நின்றவர்களை நாம் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது" என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

# பாரிய பொருளாதார நெருக்கடிகள் இலங்கையில் ஏற்பட வாய்ப்பில்லை

## பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 30

மேற்கு ஆசியாவில் (மத்திய கிழக்கு) நிலவும் போர் சூழல் இலங்கைப் பொருளாத ரத்தில் குறுகிய மற்றும் நீண்ட காலத் தாக்கங்களை ஏற்படுத்தினாலும் தற்போதைய நிதி ஸ்திரத்தன்மை காரணமாக 2022 ஆம் ஆண்டு போன்றதொரு பாரிய பொருளாதார நெருக்கடி ஏற்பட வாய்ப்பில்லை என பொருளாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளாதார மற்றும் புள்ளிவிபரவியல் துறைத் தலைவர் பேராசிரியர் வசந்த அத்துகோரள இது குறித்துத் தெரிவிக்கையில்-

2022 ஆம் ஆண்டை விட தற்போது இலங்கைப் பொருளாதாரம் வலுவாக உள்ளது. அப்போது எரிபொருள் இறக்குமதி செய்ய டொலர் இல்லை, ஆனால் இப்போது டொலர் கையிருப்பு உள்ளது. விநியோகப் பாதைகள் முடங்கியுள்ளதே தற்போதைய பிரச்னையாகும்.

டித்வா சூறாவளி பாதிப்பு இருந்தபோதிலும், 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளில் எட்டப்பட்ட 5 வீத பொருளாதார வளர்ச்சி வீதத்தைத் தொடர்ந்து பராமரிக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நீண்ட காலத்தில் உற்பத்திப் பொருளாதாரம் வீழ்ச்சியடையலாம் மற்றும் வறுமை விகிதம் அதிகரிக்கலாம். எரிபொருள் சிக்கனத்திற்காக வாரத்தில் ஒரு நாள் விடுமுறை வழங்குவது உற்பத்தி மற்றும் கல்வித்துறையைப் பாதிக்கும். எனினும் இந்த நெருக்கடியை ஒரு வாய்ப்பாகப் பயன் படுத்தலாம்.

மத்திய கிழக்கு நாடுகளுக்கு அவசியமான குடிதண்ணீரை இலங்கை ஏற்றுமதி செய்ய முடியும். இறக்குமதியைக் குறைத்து உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தலாம்-என்றார். (அ)

# நீர் கட்டண உயர்வு; தீர்மானம் இல்லை

கொழும்பு, மார்ச் 30

நீர் கட்டணங்களை அதிகரிப்பது தொடர்பில் எந்தவித தீர்மானமும் எடுக்கப்படவில்லை என தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் தலைவர் சந்தன பண்டார தெரிவித்துள்ளார்.

வழக்கமாக வருடத்தில் இரு முறை மட்டுமே கட்டணத் திருத்தங்கள் குறித்து ஆராயப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்காலத் தேவைகளைக் கருத்திற் கொண்டு அம்பத்தலேயில் மேலதிகமாக 50,000 கன மீற்றர் உற்பத்தி நிலையமும், களு கங்கைத் திட்டத்தின் கீழ் 136,000 கன மீற்றர் நிலையமும் அமைக்கப்படவுள்ளன.

வறட்சி நீடித்தால் நீர் விநியோகத்தைக் குறைக்க வேண்டிய கட்டாயம் ஏற்படலாம்.

தோட்டங்களுக்கு நீர் பாய்ச்சுதல் மற்றும் வாகனங்களைக் கழுவுதல் போன்ற அத்தியாவசியமற்ற தேவைகளுக்கு நீரைப் பயன்படுத்துவதைத் தவிர்த்து, சிக்கனமாகப் பயன்படுத்துமாறு நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் தலைவர் சந்தன பண்டார பொதுமக்களிடம் கோரியுள்ளார். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 30.03.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.